00074

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - மட்டம்-4**
**இறுதிப் பரீட்சை – 2018/2019**

# ESD2235/EPD4535: ஆளுமை உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 03.10.2020 நேரம்: மு.ப.09.30 – பி.ப.12.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும், பகுதி **II** இல் எவையேனும் (03) மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. **'ஆளுமை'** என்பதை வரையறை செய்க.

02. முன்பள்ளி பிள்ளைகளிடத்தே இனம் காணக்கூடிய **பத்து(10)** ஆளுமை பண்புகளை எழுதுக.

03. ஆளுமையின் பண்புக்கோட்பாடு (Personality traits) மற்றும் வகைக்கோட்பாட்டின் (Personality type) முக்கிய யோசனைகளை ஒப்பிடுக.

04. **'ஆளுமைக்கோளாறு'** என்பதை விளக்குக.

05. ஆளுமை கணிப்பீடு செய்யும் நடவடிக்கைகளில் **மூன்று(03)** வகைகளை குறிப்பிட்டு அவற்றில் ஏதேனுமொன்றை சுருக்கமாக விளக்குக.

06. i. அகமுகி ஆளுமையின் **மூன்று(03)** பண்புகளை எழுதுக.
    ii. நீர் மேற்குறிப்பிட்ட பண்புகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

07. நடத்தை சார்ந்த நோக்கு தொடர்பாக ஆளுமை விருத்தியை சுருக்கமாக விளக்குக.

08. பிரய்ட் உளவியல் நோக்கில் உளப்பாலியல் பகுப்பாய்வு நிலை (Psychosexual) படிநிலைகளை பெயரிடுக.

**(8x5=40 புள்ளிகள்)**

# பகுதி II

09. i. முன்பள்ளி பிள்ளைகளில் காணப்படும் **மூன்று(03)** ஆளுமைக் கோளாறுகளை பெயரிடுங்கள் மற்றும் அக்கோளாறுடைய பிள்ளைகளின் நடத்தைப் பண்புகளை தனியாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. நீர் மேற்குறிப்பிட்ட ஆளுமைக் கோளாறால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிற்கு உதவுவதில் முன்பள்ளி ஆசிரியரின் பங்கு பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

10. i. மாணவர்களிடத்தே ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவது கடமையும், பொறுப்புமாகும். மாணவர்களின் ஆளுமை மேம்பாட்டிற்காக நீங்கள் ஒரு முன்பள்ளி ஆசிரியாக ஏற்பாடு செய்யக் கூடிய **ஐந்து(05)** திட்டங்களை பெயரிடுக.

**(05 புள்ளிகள்)**

ii. முன்பள்ளி பிள்ளைகளிடத்தே ஆளுமை வளர்ச்சிக்காக மேலே குறிப்பிட்டுள்ள எவையேனும் **மூன்று(03)** திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எவ்வாறு ஒழுங்கமைக்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் முன்வைக்க.

**(3x5= 15 புள்ளிகள்)**

11. i. பிள்ளைகளில் ஆளுமை வளர்ச்சியை பரம்பரை மற்றும் சூழல் எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளிடத்தே ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதற்கு வீட்டுச் சூழலை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. i. புறமுகி (Extroverted) ஆளுமையின் **ஐந்து(05)** பண்புகளை சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. மாணவர்களிடத்தே புறமுகி ஆளுமையை வளர்ப்பதன் மூலம் ஒரு சமூகம் அடையக் கூடிய நன்மைகளை விளக்குங்கள்.

**(10 புள்ளிகள்)**

13. i. **'தனியாள் வேறுபாடுகள்'** என்ற பதத்தை உதாரணத்தை மேற்கோள்காட்டி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. தனியாள் வேறுபாட்டிற்கான நோக்கினை சமூகக்கற்றல் கோட்பாட்டினடிப்படையில் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**பதிப்புரிமை பெற்றது**